# <u>இயல்புக்கூட்டப்பொருட்கள்</u>

1. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்கில் 14.07.2019 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் திடீரென எதிர்பாராத விதமாக தீபிடித்து, காற்றின் வேகம் அதிகமாக இருந்த காரணத்தால், தீ வேகமாக பரவியதை தொடர்ந்து, தீயினை அணைப்பதற்கு தீயணைப்பு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தீயினை அணைக்கும் பொருட்டு பொக்லைன், தண்ணீர் எடுத்து வர டேங்கள் லாறி, மற்றும் அவற்றிற்கான எரிப்பொருள், தீயணைப்பு பணி செய்யும் பணியாளர்களுக்கான தேனீர், உணவு ஆகியவை அவசர அவசியம் கருதி 14.07.2019 முதல் 29.07.2019 வரை கீழ்கண்டுள்ளபடி செலவு செய்யப்பட்ட வகைக்கு பட்டியல்த்தொகை வழங்கும் பொருட்டு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | உணவு வகைக்கு | ரூ.1,04,970/- |
| 2. | தண்ணீர் சப்ளை செய்த வகைக்கு (டேங்கர் லாறி வாடகை) | ரூ.2,28,000/- |
| 3. | Hitachi வாடகை | ரூ.3,13,585/- |
| 4. | டீசல் வாங்கப்பட்ட வகைக்கு | ரூ.71,523.87 |
| | **மொத்தம்** | **ரூ.7,18,078.87** |

**அலுவலக குறிப்பு -** 1. அங்கீகரிக்கலாம்.

2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட

பிரிவு 15-ன் கீழ் மேற்படித்தொகை செலவு

செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதை

அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.9216/2019/எச்1

**தீர்மானம் எண். 386- அங்கீகரிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சிக்கு சொந்தமான புளியடி பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை அருகே முடி வெட்டும் அறை, கழிப்பிட

வசதி மற்றும் அலுவலக அறை அமைத்தல் பணிகளை மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.18,21,000/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9271/2019/இ1

**தீர்மானம் எண். 387- அங்கீகரிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் UGD திட்டம் முழுமையாக நிறைவு பெற இருப்பதால் மேற்படி பணிகளில் ஈடுபடுத்தப்படவிருக்கும் சுகாதார பணியாளர்களுக்கான பாதுகாப்பு சாதனங்கள் வாங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15,00,000/- (பதினைந்து லட்சம்)க்கு அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9269/2019/இ1

**தீர்மானம் எண். 388- அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் கணேசபுரம் மற்றும் வடசேரி பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் பகுதியில் Iron Gill மற்றும் Covering Slab அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.23,000/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் திரு.ஜோசப் அருள்ராஜ் என்பவர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9107/2019/இ1

**தீர்மானம் எண். 389- அங்கீகரிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற சலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019-2020-ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்து கீழ்கண்ட நிதி

பங்களிப்பின்படி பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண்.17349/2019/இ3, நாள்.03.09.2019 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| Name of ULB | Amount Allotted | TURIP | SFC/CFC/Land regularization fund | ULB Contribution |
|---|---|---|---|---|
| Nagercoil | 1.00 | 0.30 | 0.50 | 0.20 |

மேற்கண்ட நிதி பங்களிப்பின் படி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 பஞ்சப்பாண்டவர் கோவில் சாலை வார்டு எண்.38 மற்றும் 48 ராஜுவ் நகர் மற்றும் வைத்தியநாதபுரம் சானல் கரை (பௌர்ணமி மண்டபம் மற்றும் வட்டவிளை) தார்சாலை புதுப்பித்தல். | 100.00 |
| | **மொத்தம்** | **100.00** |

மேற்கண்டவாறு நிதி ஒதுக்கீட்டில் மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணியினை ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 8375/2019/இ3

**தீர்மானம் எண். 390- அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump House III-PH-304, PH 301, PH-305-ல் 50 HP Submersible Motor Pump –ன் காயில்

வைண்டிங் செய்து பம்புகள் முழுமையாக சர்வீஸ் செய்யும் பணிக்கு 14.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Rஅமுதன் | **மதிப்பீட்டை விட 0.90% குறைவு** |
| 2 | திரு.T.திருமலர் முகம் | **மதிப்பீட்டை விட 0.36% குறைவு** |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.Rஅமுதன் மதிப்பீட்டை விட **0.90% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.**

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.12/2019-2020

**தீர்மானம் எண். 391- அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பஸ் நிலையம் அருகில் துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (2018-2019) MCC அமைத்தல் வேலை செய்து முடித்த வகையில் மேற்படி இடத்தில் கூடுதல் பணிகளான காம்பவுண்ட் சுவர், தரைத்தளம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kகைலாஷ்குமார் ஒப்பந்தக்காரர் | **மதிப்பீட்டை விட 2.23% குறைவு (ரூ.1486706/-)** |
| 2 | திரு.V.ஜோசப் அருள்ராஜ் ஒப்பந்ததாரர் | **மதிப்பீட்டை விட 1.21% குறைவு (ரூ.1502247.00)** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 2.23% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.Kகைலாஷ்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.43/2019-2020/இ1

**தீர்மானம் எண். 392- அங்கீகரிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சிக்கு சொந்தமான அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தின் உட்பகுதியில் Shed அமைத்தல் வேலைக்கு 22.08.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.V.ஜோசப் அருள்ராஜ் ஒப்பந்ததாரர் | **மதிப்பீட்டை விட 0.00% குறைவு (ரூ.466160.45)** |

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.V.ஜோசப் அருள்ராஜ் என்பவர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.49/2019-2020/இ1

**தீர்மானம் எண். 393- அங்கீகரிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டு அதன் வழிப்பாதையில் அடைப்பு ஏற்பட்டாலும் அதனை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் ஆள் இறங்கு குழியில்பணியாளர் எவரும் இறங்காமல் இயந்திரம் கொண்டு கசடுகளை எடுக்க “Desilting Man” இயந்திரம் Auto Mounted Vechicle இரண்டு எண்ணம் வாங்கவேண்டியது அவசியம் இதே போன்று Suction Cum Jetting & rodding machine one nos & Separate Suction M/c Mounted Vechicle

ஆக

1. Suction & Jetting M/c : One No
2. Suction Vechile : One No
3. Desilting (Auto) Man : Two Nos

மேற்படி வாகனங்களை உற்பத்தி விலை விகிதமாகிய OEM (E)/GEM மூலம் வாங்கவும் அங்கீகாரத்திற்காக

.அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9270/2019/இ1

**தீர்மானம் எண். 394- அங்கீகரிக்கப்பட்டது.**

10. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு, நாகர்கோவில் மாநகராட்சி 2019-2020 ஆம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய பங்களிப்பு தொகை ரூ.2,00,000/-க்கு அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9311/2019/சி1

**தீர்மானம் எண். 395- அங்கீகரிக்கப்பட்டது.**

11. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் டிக்கட் முன்பதிவு அறை எண் 19-க்கு 23-01-2019 முதல் தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது 04-09-2019 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| **வ. எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **கடை எண்** | **பொது ஏலம் நடவடிக்கை** | **ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை** |
|---|---|---|---|---|
| 01 | திரு. P. செல்லையா<br>நாகம்மாள் இல்லம்<br>தெற்கு தெரு<br>புத்தேரி | **19** | பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை | 8750/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் டிக்கட் முன்பதிவு அறை எண் 19-க்கு ஒரு

ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.திரு.P. செல்லையா என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.8750/- என கேட்டுள்ளார்.மேற்படி அறை எண் 19.க்கு முந்தைய உரிமதாரர் மாத வாடகையாக ரூ. 25,000/- என எடுத்து முன்பதிவு அறையினை நடத்தாமலும், மாத வாடகையினை செலுத்தாமலும் இருந்துவந்த நிலையில் மாநகராட்சியால் மேற்படி முன்பதிவு அறையினை பூட்டி சீல் வைத்து கையகப்படுத்தப்பட்டது. தற்போது மேற்படி முன்பதிவு அறை எண் 19, 01-01-2019 முதல் பூட்டிய நிலையில் உள்ளது.யாரும் பொது ஏலத்திலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ள முன்வரவில்லை.அதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வருகிறது.

தற்போது திரு.P. செல்லையா என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 8750/- என ஒப்பந்தப்புள்ளி மூலம் கேட்டுள்ளார். மேற்படி டிக்கட் முன்பதிவு அறை அருகில் உள்ள டிக்கட் முன்பதிவு அறைகளைவிட குறைவான சதுர அடி உள்ளதாலும், பல மாதங்கள் பூட்டிய நிலையில் உள்ளதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வருவதாலும், மேற்படி டிக்கட் முன்பதிவு அறை எண் 19 திரு. P. செல்லையா என்பவருக்கு உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5350/2008/அ13

**தீர்மானம் எண். 396- அங்கீகரிக்கப்பட்டது.**

12. இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 315KVA Transformed No.2-ல் ஆயில் கசிவு ஏற்பட்டு உள்ளது. மற்றும் Line Out Put Terminal Gasket Packing பழுதடைந்ததை சரிசெய்யவும் Oil அளவு குறைந்திருப்பதை Top Up சரிசெய்வதற்கும் செலவினம் தொகை ரூ.8000/-க்கு (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9232/2019/இ2

**தீர்மானம் எண். 397- அங்கீகரிக்கப்பட்டது.**

13. இம்மாநகராட்சிக்குட்பட்ட கேபி. ரோடு, டெரிக் சந்திப்பு முதல் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் அருகே உள்ள லலிதா ஜுவல்லர்ஸ் வரை உள்ள சாலையில் பிரதான குடிநீர் குழாய் உடைந்து பல இடங்களில் தண்ணீர் வீணாவதால் போக்குவரத்து மற்றும் பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதாலும் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதிய குடிநீர் குழாய் (200mm) அமைக்க அவசர அவசியம் கருதி நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 (தமிழ்நாடு சட்டம் 11/2019) பிரிவு 15-ன் கீழ் ரூ.16,00,000/- மதிப்பீட்டில் திரு.T.அசோக்குமார், ஒப்பந்தகாரர் மூலம் புதிய குழாய் பதிக்க இருப்பது அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.9232/2019/இ2

**தீர்மானம் எண். 398- அங்கீகரிக்கப்பட்டது.**

14. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் கட்டையன்விளை பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள 28.08.2019 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) | திரு.T.நேசமணி<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.50% குறைவு<br>(ரூ.388217.88) |

ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.T.நேசமணி என்பவர் மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.52/2019-20/இ1

**தீர்மானம் எண். 399- அங்கீகரிக்கப்பட்டது.**

15. இம்மாநகராட்சி வலம்புரிவிளையில் உள்ள உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறையில் பிரித்து எடுப்பதற்கான ரூ.10.07 கோடி மதிப்பீட்டு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இந்திய அளவில் பிரசுரம் செய்த வகைக்கு ரூ.2,80,035/- Ravi Public City Service, Chennai –க்கு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.21962/2015/இ3

**தீர்மானம் எண்.400- அங்கீகரிக்கப்பட்டது.**

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் உள்ள வாகையடி ரதவீதி பகுதியில் உள்ள சாலைகளில் முதற்கட்டமாக வெட்மிக்ஸ் மெக்காடம் அமைக்க (WMM) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15,70,000/-க்கு (பதினைந்து லட்சத்தி எழுபதாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.1920 பிரிவு 15-ன் கிழ் மேற்படி பணியினை திரு.V.ஜோசப் அருள்ராஜ் ஒப்பந்தக்காரர் என்பவர் மூலம் செய்து முடிக்கவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9317/2019/இ1

**தீர்மானம் எண்.401- அங்கீகரிக்கப்பட்டது.**

17. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண் 17-க்கு 04-07-2019 முதல் தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது 04-09-2019 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | கடை எண் | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 01 | திரு. E முத்து குமார்<br>175/2 அறுகுவிளை<br>புது தெரு<br>நாகர்கோவில் | **17** | பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை | 8000/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண் 17-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. திரு.E முத்து குமார் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.8000/- என கேட்டுள்ளார். மேற்படி அறை எண் 17.க்கு முந்தைய உரிமதாரர் மாத வாடகையாக ரூ.12,834/- என எடுத்து நடத்திவந்த நிலையில் தொழில் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் மேற்படி கடையினை 31-03-2019 உடன் மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்துள்ளார்.

மேற்படி கடை 01-04-2019 முதல் பூட்டிய நிலையில் உள்ளது.மேலும் மேற்படி கடைக்கு 04-07-2019 முதல் தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுவந்தது.யாரும் பொது ஏலத்திலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளவில்லை.

தற்போது திரு.E முத்து குமார் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.8000/- என ஒப்பந்தப்புள்ளி மூலம் கேட்டுள்ளார். மேலும் மேற்படி கடையில் “முடி திருத்தும் நிலையம்” வைத்து நடத்தபோவதாகவும் ஆணையர் அவர்களிடம் தெரிவித்துள்ளார், மேலும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் ஒரு “முடி திருத்தும் நிலையம்” இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், மேற்படி தொழில் சிறு தொழில் என்பதாலும், கடை எண் 17 தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும் மேற்படி கடையினை திரு. E முத்து குமார் என்பவருக்கு உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.03314/2009/அ6

**தீர்மானம் எண்.402- அங்கீகரிக்கப்பட்டது.**

18. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 52 வரையில் உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் உற்பத்தி ஆகும் புழுக்களை கண்டறிந்து மருந்துகள் தெளிப்பதற்கு இந்நகர்மன்றம் தீர்மான எண். 470, நாள். 31.10.2018 CLC அடிப்படையில் 298 பணியாளர்களை தினக்கூலி ரூ.250/- வீதம் பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களை கொண்டு மேற்படி பணியினை 01.10.2019 –லிருந்து 31.03.2020 வரை மேற்க்கொள்ளவும்

அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.22.35 இலட்சம் வீதம் ஆறுமாதத்திற்கு ரூ.1,34,10,000/- தொகையினை மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – (அ) அங்கீகரிக்கலாம்

(ஆ) பணியின் அவசர அவசியம் கருதி

பணியினை மேற்க்கொண்டதற்கும்

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.23313/2012/எச்4

**தீர்மானம் எண்.403- அங்கீகரிக்கப்பட்டது.**

19. இம்மாநகராட்சிக்குட்பட்ட புல எண்.E11/10-1,2,9 (02) இல் உள்ள DDJ வணிக கட்டிடத்திற்கு அனுமதியற்ற கட்டடமாக உள்ளதால் அறிவிப்பு படிவம் I மற்றும் II (02.09.2019, 10.07.2019) வழங்கப்பட்டதன் பேரில் கட்டட உமையாளர் திரு.ஜாண் ஆல்பிரட் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP.(MD).No.16498/2019 ஆம் எண்ணாக வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கின் தீர்ப்புரை 16.08.2019 அன்று வரப்பெற்றுள்ளது. அதன்படி கட்டட உரிமையாளர் உள்ளூர்திட்ட குழுமத்தில் இரண்டு வாரகாலத்திற்குள் கட்டட உரிமம் குறித்து மேல்முறையீடு செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அந்த மேல்முறையீட்டு மனுவின் மீது நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் ஆறு வார காலத்திற்குள் கட்டட உரிமையாளரால் மேல்முறையீடு செய்யப்பட்ட மனு மீது உரிய உத்தரவு பிறப்பிக்கவும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வழக்கு WP.(MD) No.16498/2019 மீது மாநகராட்சி சார்பில் வாதாடிய வகைக்கு மாநகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கறிஙர் கட்டணம் ரூ.7500/- வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.11066/2000/எப்1

**தீர்மானம் எண்.404- அங்கீகரிக்கப்பட்டது.**

20. இம்மாநகராட்சிக்குட்பட்ட, இராஜாக்கமங்கலம் ரோடு நகரபுல எண்.N5/64 (pt), 65, 66, 67, 68, 69 (pt) இல் உள்ள கோட்டார் செட்டூர்

நயினார் டிரஸ்டுக்கு சொந்தமான இடத்தில் கட்டட அனுமதி ஏதும் பெறாமல் கட்டடம் கட்டியதற்காக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 மற்றம் 57 இன் கீழ் படிவம்I மற்றும் II வழங்கியதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையாளரை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து Dr.SAஜாய்ராஜா என்பவர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.16954/2019 இல் இரண்டு வாரங்களுக்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள கூடாது என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் வாதாடிய வகைக்காக மாநகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவருக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1823/2019/எப்1

**தீர்மானம் எண்.405- அங்கீகரிக்கப்பட்டது.**

21. இம்மாநகராட்சிக்குட்பட்ட இராஜாக்கமங்கலம் ரோடு நகர புல எண்.Ns/64(pt), 65, 66, 67, 68, 69 (pt) இல் உள்ள கட்டடத்தில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்த இம்மாநகராட்சியில் உரிமம் பெறாப்படாமல் செயல்பட்டு வந்த ராஜாஸ்மால், உரிமையாளர் திரு.ஜாய்ராஜா என்பவருக்கு தமிழ்நாடு கேளிக்கைக்காக பொதுமக்கள் கூடும் இடங்கள் குறித்த கூட்டம் 1888 இன்படி அறிவிப்பு வழங்கப்பட்டதனை எதிர்த்து மாநகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக்கி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.(MD) No.16918/2019 இன் படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 28.08.2019 வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடிய வகைக்கு மாநகராட்சி வழக்கறிஞ திரு.P.ஆதிமூலபாண்டியன்

அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3040/2019/எப்1

**தீர்மானம் எண்.406- அங்கீகரிக்கப்பட்டது.**

22. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண் 07-க்கு 04-09-2019 முதல் தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது 19-09-2019 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கடை எண் | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 01 | L Priyanks<br>15B/5 Thollavilai<br>Konam(P.O)<br>Nagercoil | **07** | பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை | 21000/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண் 07-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.திருமதி.L பிரியங்கா என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 21000/- என கேட்டுள்ளார்.மேற்படி அறை எண் 07.க்கு முந்தைய உரிமதாரர் திரு. ரபீக் என்பவர் மாத வாடகையாக ரூ 21000/- என எடுத்து நடத்திவந்த நிலையில் தொழில் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் மேற்படி கடையினை திரும்ப மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்துள்ளார்.

தற்போது திருமதி.L பிரியங்கா என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 21000/- என ஒப்பந்தப்புள்ளி மூலம் கேட்டுள்ளார்.இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை, எனவே மேற்படி கடை எண் 07 திருமதி.L பிரியங்கா என்பவருக்கு உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.14389/2018/அ6

**தீர்மானம் எண்.407- அங்கீகரிக்கப்பட்டது.**

23. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான பெதஸ்தா வணிக வளாக கடை எண் 31-க்கு 04-09-2019 முதல் தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது 25-09-2019 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|
| 01 | G Satyanesan<br>227, Puthukudyiruppu<br>Nagercoil<br>KK District | பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை | 6000/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் பெதஸ்தா வணிக வளாக கடைஎண் 31-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.6000/- என திரு. G சத்யநேசன் என்பவர் கேட்டுள்ளார்.மேற்படி கடையின் முந்தைய உரிமதாரர் மாத வாடகையாக ரூ.8000/- என எடுத்து அனுபவித்து வந்தார்.அன்னார் மேற்படி கடையின் தொழில் நலிவடைந்த நிலையில் மாத வாடகை தொகை செலுத்தாத நிலையில் மேற்படி கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடை தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும், மேற்படி கடையின் அருகில் உள்ள கடைகளின் மாத வாடகை ரூ 5000/, ரூ.6000/- என்ற அடிப்படையில் உள்ளதாலும் மேலும் மேற்படி கடைக்கு தொடர்ச்சியாக பொது ஏலம் கோரப்பட்டு யாரும் கேள்வி கேட்க முன்வராததாலும் தற்போது உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ.6000/. என கேட்டுள்ள திரு, G சத்தியநேசன் என்பவருக்கு உரிமம் வழங்க தெவித்துள்ளபடி பெதஸ்தா வணிக வளாக கடை எண் 31-க்கு திரு.சேத்தியநேசன் என்பவருக்கு கடை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.07689/2019/அ6

**தீர்மானம் எண்.408- அங்கீகரிக்கப்பட்டது.**

24. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018-ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ஜோதி தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் மற்றும் சிறுமின்விசைத்திட்டம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/4592/2016 நாள். 05.01.2019-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 05.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.ST.மணிகண்டன் | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.ST.மணிகண்டன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.17% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.148/2017-2018

**தீர்மானம் எண்.409- அங்கீகரிக்கப்பட்டது.**

25. இம்மாநகராட்சிக்குட்பட்ட அனந்தனார் கால்வாயில் நீரேற்றம் செய்வதற்கான 120HP மற்றும் 60 HP மின்மோட்டார்கள் Winding, Alteration செய்து Panel Board புதிதாக பொருத்துவதற்கும் 28.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Rஅமுதன் | மதிப்பீட்டை விட 0.62% குறைவு |
| 2 | T.திருமலர் முகம் | மதிப்பீட்டை விட 0.18% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.Rஅமுதன் மதிப்பீட்டை விட 0.62% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.21/2019-2020

**தீர்மானம் எண்.410- அங்கீகரிக்கப்பட்டது.**

26. இம்மாநகராட்சிக்குட்பட்ட KP. ரோடு சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய (Wet Mix Macadam) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.17,500/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை திரு.V.ஜோசப் அருள்ராஜ் என்பவர் மூலம் செய்து முடிக்கவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9581/2019/இ1

**தீர்மானம் எண்.411- அங்கீகரிக்கப்பட்டது.**

27. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.52-ல் St.மேரீஸ் தெருவில் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,35,000/-க்கு (நான்கு லட்சத்தி முப்பத்தி ஐயாயிரம்) அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9830/2019/இ1

**தீர்மானம் எண்.412- அங்கீகரிக்கப்பட்டது.**

28. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49-ல் தட்டான்விளை அம்மன்கோவில் வடக்குத்தெருவில் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/-க்கு அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9920/2019/இ1

**தீர்மானம் எண்.413- அங்கீகரிக்கப்பட்டது.**

29. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள சமய குறிப்பாளர் அறை மற்றும் மெக்கானிக்கல் அறைகள் போக்குவரத்து கழகத்திற்கு ஒதுக்கப்பட்டதில், மேற்படி கட்டிடத்திற்கான Additional Security Deposit ரூ.8451/- செலுத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேற்படி தொகை மாநகராட்சியால் செலுத்தப்படாத காரணத்தினால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. எனவே Security deposit ரூ.8451+அபராத தொகை ரூ.122/-ம் சேர்த்து மொத்தம் ரூ.8573/- தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தால் செலுத்தப்பட்ட தொகை ரூ.8573/-ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10380/2019/இ4

**தீர்மானம் எண்.414- அங்கீகரிக்கப்பட்டது.**

30. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் ரயில்வே பீடர் சாலையில் உள்ள குறுகலான பாலத்தினை விரிவுபடுத்திட 06.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sதியாகராஜன் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு (ரூ.327360/-) |
| 2 | திரு.RBராகுல் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 5.17% அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு,Sதியாகராஜன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.55/2019-20/இ1

**தீர்மானம் எண்.415- அங்கீகரிக்கப்பட்டது.**

31. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஒழுகினசேரி பாலம் முதல் ஆராட்டு ரோடு செல்லும் சாலை வரை தார்தளம் அமைக்க 06.09.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sஜோசப் அருள்ராஜ் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டு விலை விகிதம் (ரூ.350486.42) |

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.Sஜோசப் அருள்ராஜ் என்பவர் மதிப்பீட்டு விரை விகிதம் கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.56/2019-20/இ1

**தீர்மானம் எண்.416- அங்கீகரிக்கப்பட்டது.**

32. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் ரயில்வே பீடர் சாலையில் தார்தளம் அமைத்தல் வேலைக்கு 06.09.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sதியாகராஜன் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு (ரூ.1308520/-) |
| 2 | திரு.RBராகுல் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 3.91% அதிகம் (ரூ.1360055/-) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு,Sதியாகராஜன் என்பவர் மதிப்பீட்டை விட 0.02% கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர

அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.57/2019-20/இ1

**தீர்மானம் எண்.417- அங்கீகரிக்கப்பட்டது.**

33. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் ஆராட்டு சாலை காந்தி பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளுதல் வேலைக்கு 14.08.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.வீரமணி<br>ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டு விலை விகிதம்<br>(ரூ.37919.85) |

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.T.வீரமணி என்பவர் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.36/2019-20/இ1

**தீர்மானம் எண்.418- அங்கீகரிக்கப்பட்டது.**

34. இம்மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்திற்கு செல்லும் சுரங்க நடைபாதையின் மேல்புறம் காலியாக உள்ள இடத்தில் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்ட தக்க வகையில் ஒரு வணிக வளாகம் அமைத்திட அறிவுறுத்தப்பட்டது. எனவே அப்பகுதியில் உள்ள நடைபாதை பூ வியாபாகளை அப்பகுதியில் நிரந்தரமாக அமைத்திட ஒரு Shed மற்றும் அதற்கான முழு வசதிகளுடன் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5,55,000/-க்கு (ஐந்து லட்சத்தி ஐம்பதாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்தக்காரர் திரு.T.வீரமணி என்பவர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10379/2019/இ1

**தீர்மானம் எண்.419- அங்கீகரிக்கப்பட்டது.**

35. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.44-ல் பெதஸ்தா காம்பளக்ஸ் பின்பகுதியில் உள்ள கழிப்பறைகளில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளுதல் வேலைக்கு 13.09.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kமணிகண்டன் ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு (ரூ.75777.50) |

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.Kமணிகண்டன் என்பவர் மதிப்பீட்டை விட 0.15% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.59/2019-2020

**தீர்மானம் எண்.420- அங்கீகரிக்கப்பட்டது.**

36. இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.45-ல் கோர்ட் ரோடு டதி பள்ளி அருகாமையிலும், எதிர்புறத்திலும் உள்ள பயணியர் நிழற்குடைகள் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.40,000/-க்கு (நாற்பதாயிரம்) அனுமதியும், பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9829/2019/இ1

**தீர்மானம் எண்.421- அங்கீகரிக்கப்பட்டது.**

37. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் கோயில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 24-ம் தியதி முதல் டிசம்பர் மாதம் 3-ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்று வருகிறது. மேற்படி திருவிழாவின் போது அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூாரி முன்புறத்திலிருந்து கோட்டார் ஈத்தாமொழி ரோடு சந்திப்பு வரையிலும், செட்டிக்குளம் சந்திப்பு கிழக்கு பக்கத்திலிருந்து சவேரியார் கோயில் சந்திப்பு வரையிலும் (பயோனியர் முத்துமஹால் முன் பகுதி மற்றும் கோயில் நுழைவு வாயில் பகுதி நீங்கலாக) சாலையோரம் இருபுறமும் உள்ள இடங்களில் அமைக்கப்படும் 5`x5` அளவுள்ள தற்காலிக ஸ்டால்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்பட்டு வரப்படுகிறது. அது போன்று இவ் ஆண்டும் 24.11.2019 முதல் 03.12.2019 வரை 10 தினங்கள் திருவிழா நடைபெறும் போது அமைக்கப்பட உள்ள ஒவ்வொரு தற்காலிக ஸ்டால்களுக்கும் நாளொன்றிற்கு ரூ.100/- வீதம் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் வழங்கிட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.18664/2015/அ8

**தீர்மானம் எண்.422- அங்கீகரிக்கப்பட்டது.**

38. இம்மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள காமராஜர் வணிக வளாகத்தில் உள்ள (5 மாடி கட்டிடம்) கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட தொகை ரூ.16,00,000/- (பதினாறு லட்சம்) –க்கு அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.9665/2019/இ1

**தீர்மானம் எண்.423- அங்கீகரிக்கப்பட்டது.**

39. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் வாகனம் எண்.TN74 D2036 – ற்கு புதிய மின்கலப்பெட்டி வாங்கி பொருத்துவதற்கு 16.09.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Raja Battery Service<br>Nagercoil | Rs.7875/- |
| 2 | Maria Battery<br>Nagercoil | Rs.7950/- |

மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.7875/-க்கு Raja Battery Service, Nagercoil வழங்கியதை ஏற்று விநியோக உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10428/2017/இ2

**தீர்மானம் எண்.424- அங்கீகரிக்கப்பட்டது.**

40. இம்மாநகராட்சி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/-க்கு (ரூ.இரண்டு லட்சம்) அனுமதியும் பணியின் அவசரம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10262/2019/இ1

**தீர்மானம் எண்.425- அங்கீகரிக்கப்பட்டது.**

41. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 –ல் தம்மத்துக்கோணம் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பராமப்பு பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,50,000/-க்கு அனுமதியும், (இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10262/2019/இ1

**தீர்மானம் எண்.426- அங்கீகரிக்கப்பட்டது.**

42. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வடிவீஸ்வரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகத்தில் கான்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்க்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70,000/-க்கு (ரூ.எழுபதாயிரம்) அனுமதியும் பணியின் அவசரம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10428/2019/இ1

**தீர்மானம் எண்.427- அங்கீகரிக்கப்பட்டது.**

43. இம்மாநகராட்சிக்கு சொந்தமான சூர்யா நகர் குளத்தில் தூர் வாரும் பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,00,000/-க்கு அனுமதியும், பணியின் அவசரம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மற்றும் அரசு திட்டம் என்பதால் மேற்படி பணியை பொது நிதி மூலம் மேற்க்கொண்டு CSRநிதி அல்லது வேறு ஏதாவது திட்ட நிதி இதன்பால் வருமாயின் அதில் ஈடுசெய்து பணிகள் செய்திடவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10622/2019/இ1

**தீர்மானம் எண்.428- அங்கீகரிக்கப்பட்டது.**

44. இம்மாநகராட்சிக்கு சொந்தமான சூர்யாநகர் குளத்தை சுற்றிலும் தடுப்புச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.24,50,000/-க்கு அனுமதியும், பணியின் அவசரம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும், மற்றும் அரசு திட்டம் என்பதால், மேற்படி பணியினை பொதுநிதி மூலம் மேற்க்கொண்டு CSRநிதி அல்லது வேறு ஏதாவது திட்ட நிதி வருமாயின் அதில் ஈடு செய்து பணிகள் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10426/2019/இ1

**தீர்மானம் எண்.429- அங்கீகரிக்கப்பட்டது.**

45. இம்மாநகராட்சிக்குட்பட்ட வேப்பமூடு பகுதியில் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் அமைக்கப்பட்ட நாஞ்சில் பஜாரில் பேவர்பிளாக் சாலை அமைக்கவும், பெயர் பலகை மற்றும் 54 கடைகளுக்கு கதவு அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,20,000/- (ஐந்து லட்சத்தி இருபதாயிரம்)-க்கு அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10427/2019/இ1

**தீர்மானம் எண்.430- அங்கீகரிக்கப்பட்டது.**

46. நாகர்கோவில் மாநகராட்சியின் சொந்தமான வடசேரி மீன் சந்தை முன்புறம் அமைந்துள்ள கடை எண்.3, வரிவிதிப்பு எண்.2018167, மாத வாடகை ரூ.17,818/- (சேவை வரி உட்பட) திரு.SMபிரதீப் என்பவர் உரிமம் எடுத்து நடத்திவந்தார் அன்னார் மாத வாடகை ரூ.3,02,906/- செலுத்தாத காரணத்தினால் மேற்படி கடையினை மாநகராட்சி வருவாய் ஆய்வாளரால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் அன்னார் செலுத்த வேண்டிய மாத வாடகை தொகையினை அன்னாரின் வைப்புத்தொகை மற்றும் 12 மாத வாடகை முன் வைப்புத்தொகையில் இருந்து ஈடு செய்துவிட்டு மேற்படி கடையினை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்காகும் செலவினத்திற்கும் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7841/2018/அ13

**தீர்மானம் எண்.431- அங்கீகரிக்கப்பட்டது.**

47. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வடசேரி இராஜேஷ் திரையரங்கம் ஆக்கிரமித்து வைத்த இடத்தினை கையகப்படுத்திய இடத்தில் நிற்கும் மரங்கள் (மாமரம் -1, பலாமரம் -1, வேப்பமரம்-2, தென்னை மரம்-2) வேருடன் அகற்றி மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் மீண்டும் நட்டு வைக்க ரூ.72,000/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.படேவிட் மைக்கேல், 115, திருகுடும்பகோவில் தெரு,

மேலராமன்புதூர், நாகர்கோவில் என்பவருக்கு அனுமதி வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.2769/2019/இ3

**தீர்மானம் எண்.432- அங்கீகரிக்கப்பட்டது.**

48. இம்மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின் படி, பொது மக்கள் தங்கள் விடுகளில் தினசரி சேரும் குப்பை கழிவுகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் மற்றும் அபாயகரமான குப்பைகள் என பிரித்து துப்புரவு பணியாளர்களிடம் வழங்கிடும் பொருட்டு, அக்டோபர் 2-ம் தேதி (02.10.2019) முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நடவடிக்கை விவரங்கள் பொதுமக்கள் அறியும் பொருட்டு அவசர அவசியம் கருதி ஒரு லட்சம் நோட்டீஸ்கள் அச்சடிக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி ஒரு லட்சம் நோட்டீஸ்கள் அச்சடிக்கும் பொருட்டு 26.10.2019-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | அச்சகம் பெயர் /முகவரி | நோட்டீஸ் 1-க்கு ரூ. | ஒரு லட்சம் நோட்டீஸிக்கு (வரி உட்பட) ரூ. |
|---|---|---|---|
| 1 | Innovation Printers<br>New Assisi Complex<br>Nagercoil -1 | 0.77 | 77,000/- |
| 2 | Jashua Printing Press<br>Victorya Press Road<br>Nagercoil -1 | 1.10 | 1,10,000/- |
| 3 | OM Printers & Graphics,<br>Joe David Street<br>Nagercoil-3 | 1.00 | 1,00,000/- |

மேற்கண்டுள்ளபடி 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி அச்சகத்தில் ஒருலட்சம் நோட்டீஸ், அச்சடிக்கவும், அதற்குண்டான செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. ஒப்புதல் அளிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் /
ஆணையர் அவர்களின் முன் அனுமதி
பெற்று திடக்கழிவு மேலாண்மை விதிகள்
குறித்த நோட்டீஸ் அச்சடிக்க நடவடிக்கை
எடுக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.13255/2019/எச்1

**தீர்மானம் எண்.433- அங்கீகரிக்கப்பட்டது.**

49. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி மீன் சந்தை முன்புறம் அமைந்துள்ள எண்.03-க்கு தொடர்ச்சியாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 25.09.2019 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|
| 01 | திரு.T.சொக்கலிங்கம்<br>த/பெ தாணுபிள்ளை<br>15/40 சுப்பிரமணியபுரம்<br>தோவாளை<br>கன்னியாகுமரி மாவட்டம் | பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை | 15100/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி மீன் சந்தை முன்புறம் அமைந்துள்ள கடை எண்.03-க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.15100/- என திரு.T.சொக்கலிங்கம் என்பவர் கேட்டுள்ளார்.

மேற்படி கடையின் முந்தைய உரிமதாரர் மாத வாடகையாக ரூ.15100/- என எடுத்து அனுபவித்து வந்தார். எனவே மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லாத காரணத்தினால் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.15100/- என கேட்டுள்ள திரு.t.சொக்கலிங்கம் என்பவருக்கு கடை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.
அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.
கோப்பு எண்.7841/2019/அ13
**தீர்மானம் எண்.434- அங்கீகரிக்கப்பட்டது.**

50. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் மேல்புறம் அமைந்துள்ள நல்லபெருமாள் மெடிக்கல் கடையின் அடுத்துள்ள சுரங்கபாதையின் மேல் உள்ள காலி இடத்திற்கு 08-08-2019 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அன்றைய தினம் பொது ஏலத்தில் கலந்து கொள்வதற்காக திரு. D சந்திரசேகரன், திரு..T. சொக்கலிங்கம் மற்றும் திரு.V. சுரேஷ் என்பவர்கள் வந்திருந்தனர்.மேலும் அண்ணா பேருந்து நிலையம் சுற்றியுள்ள நடைபாதைகளில் கூடையில் வைத்து பூ வியாபாரம் செய்து வந்த சிறு வியாபாரிகள்1.திரு.மணி, 2.திரு.ராஜீ, 3.திரு.திருமால், 4.திரு.செல்வம், 5.திரு.சிவக்குமார்,6.திரு.குமார், 7.திரு.கோபால், 8.திரு-நீலகண்டன், 9.திரு.கிருஷ்ணன், 10.திரு.செல்வம், 11.திரு.ராஜமோகன் மற்றும் 12. சகாயம் ஆகியோர் தாங்கள் அனைத்து வியாபாரிகளும் நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்து வருகிறோம் எங்களுக்கு மேற்படி காலி இடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கி தர வேண்டும் என மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் நேரடியாக கோரிக்கை வைத்தனர்.

ஆணையர் அவர்கள் பொது ஏலத்தில் கலந்து கொள்ள வந்த திரு. D சந்திரசேகரன், திரு..T. சொக்கலிங்கம் மற்றும் திரு.V. சுரேஷ் மற்றும் சிறு பூ வியாபாரிகள் 12 நபர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி ஆலோசனை கூட்டத்தில் சிறு பூ வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்க கூடாது என்ற அடிப்படையிலும், பொது ஏலத்தில் கலந்து கொள்ள

வந்தவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு மேற்படி கடையில் ஒரு பகுதியில் முதல் நபராக ஒப்பந்தப்புள்ளி மூலம் கூடுதல் வாடகை தொகை கோரியதிரு.. T. சொக்கலிங்கம் என்பவருக்கு ஒதுக்கி வைப்புத் தொகையாகரூ 5,00,000/- செலுத்த வேண்டும் எனவும், கடையில் மறு பகுதியில் முதல் நபராக சிறு வியாபாரிகளில் திரு.மணி என்பவருக்கும் ஒதுக்கி அன்னாரும் வைப்புத் தொகையாக ரூ 5,00,000/- வைப்புத் தொகை செலுத்த வேண்டும் எனவும், 2-ம் நபராக திரு. கிருஷ்ணன், 3-ம் நபராக திரு.திரு.குமார், 4-ம் நபராக திரு- ராஜீ, 5-ம் நபராக திரு- ராஜ் மோகன், 6-ம் நபராக திரு.திருமால், 7-ம் நபராக திரு.செல்வம், 8-ம் நபராக திரு.கோபால், 9-ம் நபராக திரு.செல்வம், 10-ம் நபராகதிரு.சகாயம், 11-ம் நபராக திரு.சிவகுமார், 12-ம் நபராக திரு.நீலகண்டன், மற்றும் திரு.D சந்திரசேகரன், திரு. V. சுரேஷ் ஆகியோர்களுக்கு தலா ஒரு நபருக்கு ஒரு நாள் வாடகையாக ரூ 400/- (மாத வாடகை ரூ 12000/-) என நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் திரு..T. சொக்கலிங்கம் மற்றும் திரு. மணி நீங்கலாக மீதமுள்ள ஒவ்வொரு நபரும் மாத வாடகை ரூ 12000/- என்ற அடிப்படையில் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகையாக ரூ 1,44,000/- உடனடியாக அலுவலகத்தில் செலுத்த வேண்டும் என அனைவர்களின் சம்மதத்துடன் ஆணையர் அவர்கள் உத்தரவிட்டார். மேற்படி வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை வைப்புத் தொகை செலுத்த தவறினால் மேற்படி காலி இடத்தினை கூடுதல் மாத வாடகையாக ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரிய திரு.T.சொக்கலிங்கம் என்பவருக்கு முழு குத்தகை உரிமமாக ஒப்படைக்கப்படும் எனவும், மேலும் அண்ணா பேருந்து நிலையம் பேருந்து வந்து செல்லும் பாதைகளில் உள்ள நடைபாதைகளில் மறறும் அண்ணா பேருந்து நிலையம் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நடைபாதைகளில் பொது மக்களுக்கு இடையூராக எந்த வியாபாரமும் செய்ய கூடாது என ஆணையர் அவர்களால் உத்தரவு பிரப்பித்து 12 மாத வாடகை வைப்புத் தொகையினை உடனடியாக செலுத்த வேண்டும் என தெரிவித்து ஆலோசனை கூட்டம் நிறைவுபெற்றது.

ஆனால் ஆணையர் ஆவர்கள் ஆலோசனை கூட்டத்தில் தெரிவித்ததுபோல் 12 சிறு வியாபரிகள் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகையினை செலுத்தவில்லை. மேலும் ஆணையர் அவர்கள் மேற்படி

காலி இடத்திற்கு இன்னும் கூடுதல் மாத வாடகை தொகைக்கு போகும் என கருதியதால் மேற்படி காலி இடத்திற்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி மன்ற அங்கீகாரித்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6507/2019/அ6

**தீர்மானம் எண்.435- அங்கீகரிக்கப்பட்டது.**

51. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் மேல்புறம் அமைந்துள்ள நல்லபெருமாள் மெடிக்கல் கடையின் அடுத்துள்ள சுரங்கபாதையின் மேல் உள்ள காலி இடத்திற்கான ஒத்தி வைக்கப்பட்ட மறு பொது ஏலம் இன்று 16-09-2019 நடைபெற்றது. மறு பொது ஏலம் நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்ற அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பொது ஏலம் நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|
| 01 | திரு. T. சொக்கலிங்கம் த/பெ திரு. தாணுப்பிள்ளை 15/40 .சுப்பிரமணியபுரம்‘ தோவாளை | பொது ஏலத்தில் கலந்து கொண்டு கேள்வி கேட்கவில்லை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 02 | திரு- சுரேஷ். V 11/56 எட்டுகூட்டு தேரிவிளை அகஸ்தீஸ்வரம் | பொது ஏலத்தில் கலந்து கொண்டு கேள்வி கேட்கவில்லை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 03 | திரு. திருமால். N த/பெ நாராயணன் பத்தல் விளை நாகர்கோவில் | 1,87,000/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 04 | திரு- கிருஷ்ணன் 15/47 சுப்பிரமணியபுரம் தோவாளை | பொது ஏலத்தில் கலந்து | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டு கேள்வி கேட்கவில்லை | கொள்ளவில்லை |

மேற்காணும் பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 1,87,000/- (சேவை வரி நீங்கலாக) என திரு. N திருமால் என்பவர் கேட்டுள்ளார்- பொது ஏலத்தில் வேறு யாரும் கேள்வி கேட்கவில்லை.ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

எனவே மேற்படி காலி இடத்திற்கு உயர்ந்தபட்ச மாத வாடகை கோரிய திரு.N திருமால் என்பவருக்கு உரிமம் வழங்க மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.
கோப்பு எண்.6509/2019/அ6
**தீர்மானம் எண்.436- அங்கீகரிக்கப்பட்டது.**

52. உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை மற்றும் கடிதத்தின்படி இம்மாநகராட்சிக்குட்பட்ட எறும்புகாடு, நீண்டகரை `A` மேற்கு வில்லேஜ் கிராமபுல எண்.266/9 இல் 1800 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/நாஉதிகு எண்.03/2019 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு 1971 ஆம் நகர் ஊரமைப்புக்கூட்டம் பிரிவு 49 இன்படி குடியிருப்பு மனைகளுக்கு சிறப்பு நிபந்தனைகளுடன் நி.அ/ம.அ/நா.உதிகு எண்.05/2019 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு சாலை அமைக்கப்பட்டதற்கான அறிக்கை மாநகர பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது மற்றும் தெருவிளக்கு மற்றும் குடிநீர் இணைப்பிற்கான தொகை ரூ.81000/- செலுத்தியுள்ளதாலும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.
அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10614/2018/எப்1

**தீர்மானம் எண்.437- அங்கீகரிக்கப்பட்டது.**

53. இம்மாநகராட்சிக்குட்பட்ட கே.பி.ரோடு நகரபுல எண்.93/27-1இல் கட்டட அனுமதி வேண்டி திரு.Dr.SR ரீனிவாச கண்ணன் என்பவர் சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்ததில் மேற்கண்ட புல எண்.93/27-1-ற்கு வடசேரி வில்லேஜ் ஆனது மலையிட கிராமப்பகுதியில் அமைவதால் மலையிட பாதுகாப்பு குழுமத்தில் பொருள் வைக்க மாநகராட்சி மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் அவர்கள் ந.க.எண்.916/2011 நா.உதிகு UAC No:74/12 நாள்.20.09.2019 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி வடசேரி வில்லேஜ் புல எண்.93/27-1 ஆனது விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.III இல் வணிக கட்டடங்கள் அமையும் பகுதியில் அமைகிறது. மேலும் மேற்கண்ட இடம் தற்பொழுது நகர்புற வளர்ச்சியில் உள்ளதாலும், மேற்கண்ட புல எண்.93/27-1இல் உள்ள மனையினை மலையிட பாதுகாப்பு குழுமத்தில் பொருள் வைக்கும் பொருட்டு தடையின்மை சான்று வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5919/2013/எப்1

**தீர்மானம் எண்.438- அங்கீகரிக்கப்பட்டது.**

54. இம்மாநகராட்சி பகுதியில் அடல் நகர்புற புத்துணர்வு மற்றும் மாற்றங்களுக்கான திட்டம் 2015-2016 –ன் கீழ் மூன்றாவது குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி பகுதியில் 11 எண்ணம் மேல்நிலை நீர்தேக்கம் கட்டி குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஆசிர்வாதம்நகர் பகுதியில் 2.40 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கம் அமைப்பதற்கு மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.A1-33/3-ல் போதிய அளவு இடம் இல்லாததால், அதன் அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளரான திரு.M.பிரைட் V.ரோவ் வயது 83, த/பெ.முகிலன் மற்றும் திருமதி.M.நல்லபாய் என்பவர்களது இடம் கட்டையன்விளை, சர்வே எண்.A1-33/4-ல் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு 1.55 சென்ட் நிலம் வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் மாநகராட்சிக்கு வழங்க சம்மதம் தெரிவித்ததன் படி வழிகாட்டி மதிப்பீடு வழங்க பத்திர

பதிவு துறையில் கேட்கப்பட்டதில் ஒரு சென்ட்க்கு ரூ.2,92,063/- வீதம் 1.55 சென்ட்க்கு ரூ.4,58,539/- வழங்கப்படவேண்டும். மேற்படி இடத்தினை வழிகாட்டி மதிப்பீட்டின்படி வாங்கி மாவட்ட ஆட்சியர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் அனுமதி பெற்று மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.4,58,539/-ஐ திரு.Mபிரைட் V.Cராவ் மற்றும் திருமதி.Mநல்லபாய் என்பவருக்கு வழங்கி சர்வே எண்.A1-33/4-ல் 1.55 சென்ட் நிலத்தினை மாநகராட்சிக்கு பெற நடவடிக்கை மேற்கொள்ளஅங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.22185/2015/இ3

**தீர்மானம் எண்.439- அங்கீகரிக்கப்பட்டது.**

55. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 20.12.2018 அன்று தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாவட்ட தலை நகரங்களிலுள்ள மாநகராட்சிகளில் அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மை சாலைக்கு “தமிழ்ச் சாலை” என பெயரை தெரிவு செய்து அளித்திட கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழியாக கருத்துரு அனுப்ப கேட்டு சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்கம், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இயக்குநர் (பொ) அவர்களின் நேர்முக கடிதம் எண்:10528/ஆ.மொ.1/2018, நாள்:18.09.2019-இன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மக்கள் பயன்பாடு அதிகமுள்ள சாலையாக உள்ள பாலமோர் ரோடு உழவர் சந்தை சந்திப்பிலிருந்து வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் வழியாக டிஸ்டிலரி ரோடு வரை செல்லும் DD திட்டச்சாலையினை “தமிழ்ச்சாலை” என பெயர் சூட்டவும் மற்றும் வடசேரி பேருந்து நிலையத்திலிருந்து காசிவிஸ்வநாதர் கோவில் வழியாக எம். எஸ். ரோடு வரையுள்ள சாலை பகுதியினை “மாநகர் நூற்றாண்டுச்சாலை” என இவ்விரண்டு சாலைகளுக்கும் நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 பிரிவு 266-இன் கீழ் பெயர் சூட்ட ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழியாக தமிழ் வளர்ச்சித் துறைக்கு கருத்துரு அனுப்ப அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்:11157/2019/எப்1

**தீர்மானம் எண்.440- அங்கீகரிக்கப்பட்டது.**

56. இம்மாநகராட்சிக்குட்பட்ட பாலமோர் ரோட்டில் உள்ள புல எண்.E11/2-2 (Pt) இல் திருமதி. லீலா வாசுதேவன் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தினை அகற்றுவது தொடர்பாக அன்னாரால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு SCP (Civil) No.10762/2019-ம் எண்ணாக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை ஏற்று நடத்தும் வழக்கறிஞர் திரு.P.சோமசுந்தரம் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கு அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்:10591/2014/எப்1

**தீர்மானம் எண்.441- அங்கீகரிக்கப்பட்டது.**

57. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு / இறப்பு சான்றுகள் தயாரிக்கும் பணி, பதிவில்லா சான்றுகள் தொடர்பான பதிவேடுகள் தேடும் பணி, ஆகியவற்றிற்கும், நகரமைப்பு பிரிவில் தட்டச்சர்(ம) அலுவலக உதவியாளர் ஆகிய பணிகளுக்கும், வருவாய் பிரிவில் ஆண்டு கணக்குகள் முடித்தல் மற்றும் அறிவிப்புகள் எழுதும் பணி, பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு ரிப்போர்ட் அனுப்புதல், இயக்குநர், பொது சுகாதாரம் (ம) தடுப்பு மருந்து சென்னை அலுவலகத்திற்கு ரிப்போர்ட் அனுப்புதல், DBC ரிப்போர்ட் அனுப்புதல், கணக்குப் பிரிவில் உதவியாளர் பணி போன்றவற்றிற்கென 12 நபர்களை சுய உதவிக்குழு மூலம் நியமனம் செய்யவும் இவர்களுக்கான ஓராண்டு செலவினம் ரூ.18,97,250/-ற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி ஜுலை 2019-ம் மாதத்தில் ரூ.1,12,995/-ற்கான செலவினம் மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்:1127/2018/எச்2

**தீர்மானம் எண்.442- அங்கீகரிக்கப்பட்டது.**

58. இம்மாநகராட்சிக்குட்பட்ட கே.பி.ரோடு புல எண்.P2/4(pt) இல் உள்ள கட்டடமானது சாலை சீரமைப்பு (Road Alignment) க்காக நிலையில் இருந்த கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்டள்ளது. மேற்படி மனையினை சுற்றி ஓடை செல்வதினால் சாலை சீரமைப்பு பணிகள் செய்ய இயலாமல் போவதினாலும் பின்வரும் நாளில் ஓடை அமையும் பட்சத்தில் வாகன விபத்துகளும் ஏற்படும் சூழல் நிகழ்வதாலும், பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப சாலையின் நேர்சீரமைப்பிற்கு இணையாக ஓடையினை மாற்றி மனுதாரரின் பட்டா நிலம் வழியாக செல்ல மனை உரிமையாளர் திருமதி.அன்னராஜன் ஹென்றி அவர்கள் சம்மதம் தெரிவித்து ஒப்பந்த பத்திரம் சமர்பித்துள்ளார்.

எனவே அன்னாரின் பட்டா நிலம் வழியாக ஓடை செல்ல அனுமதித்திட அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்:11799/2019/எப்3

**தீர்மானம் எண்.443- அங்கீகரிக்கப்பட்டது.**

59. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆசாரிபள்ளம் ரோடு, புல எண்.G4/15-14இல் உள்ள மனையில் ஏற்கனவே சாலை விரிவாக்கம் இருப்பதினால் மனுதாரருக்கு கட்டட வரைபடத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது.இந்நிலையில் மனுதாரர் Dr.Rரஞ்சுலா கோல்டாலை டாண்டர் சாலைக்கான இடத்தினை விட்டு கொடுப்பதாக தெரிவித்து உறுதிமொழி கடிதம் கொடுத்துள்ளார்.

எனவே மேற்கண்ட புல எண்.G4/15-14இல் உள்ள மொத்த சாலை விரிவாக்கத்திற்கான 37.75 சதுர மீட்டர் மனையில் 32.65 ச.மீ மனையை சாலைக்கென விட்டுக்கொடுத்து பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளதால் தற்பொழுது மனுதாரரின் வசம் உள்ள 5.10 ச.மீ.மனையை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

க.வி.எண்:865/2017/எப்2

**தீர்மானம் எண்.444- அங்கீகரிக்கப்பட்டது.**

60. இம்மாநகராட்சிக்குட்பட்ட 22 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள், அலுவலகங்கள், மார்க்கெட் மற்றும் பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள தெருவிளக்குகளை பராமரிக்க மின்சாதன உதிரிப்பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு, இரண்டாவது முறையாக 12.07.2019 அன்று E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) | M/s. TRTraders<br>தாழக்குடி | மதிப்பீட்டை விட 3.62% குறைவு |
| 2) | M/s.Omnstronics Lighting Solutions<br>Chennai | மதிப்பீட்டை விட 12.57% அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதத்தினை இன வாரியாகஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்திட மாநகர ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் படி, இன வாரியாக தயார் செய்யப்பட்டதில் 20 இனங்களில் மூன்று இனங்கள் அதாவது 40 Watts Tube Light, Tube light Stake holder மற்றும் 20 W CFL Bulb மட்டுமே M/s Omnstronics நிறுவனம் குறைத்து கொடுத்திருந்தனர்.மேற்படி நிறுவனம் குறைத்து கொடுத்திருந்தாலும் விலை விகிதாச்சாரம் ஏற்ற இறக்கம் வெகுவாக இல்லாத காரணத்தினாலும் மூன்று இனங்களுக்கு மட்டும் ஒரு பணி ஆணை வழங்கினால் நிர்வாக ரீதியாக குறிப்பிட்ட காலத்திற்குள் பொருட்கள் வருவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாலும் மூன்று இனங்களுக்கு மட்டும் L2 Bidder –ல் விலை விகிதத்திற்கு விநியோகம் செய்திட விலை குறைப்பு செய்து தர L1 Bidder (M/s.TR Traders) –ஐ கேட்டுக்கொண்டதில் விலை குறைப்பு செய்து தர சம்மத கடிதம் L1 Bidder –ல் வழங்கப்பட்டது.

அதன்படி தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) | M/s. TRTraders<br>தாழக்குடி | மதிப்பீட்டை விட 4.00% குறைவு |
| 2) | M/s.Omnstronics Lighting Solutions<br>Chennai | மதிப்பீட்டை விட 12.57% அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள Ms. TRTraders நிறுவனம் (-)4.00% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மேற்படி பணிக்கான பணி உத்தரவு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி Ms.TRTraders நிறுவனம் தாழக்குடி வழங்கப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்:4555/2017/இ4

**தீர்மானம் எண்.445- அங்கீகரிக்கப்பட்டது.**